தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 38/பேரூ/2022

நாள் 29.04.2022

திரு. சேதுபதி துரைசாமி,
ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஊத்தங்கரை பேரூராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், Old ASTC Hudco, HIG 119, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சேதுபதி துரைசாமி என்பவரின் 28.03.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.04.2022ல் பெறப்பட்டு, 38/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், Old ASTC Hudco, HIG 119 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சேதுபதி துரைசாமி என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் செயல் அலுவலர்/பொது தகவல் அலுவலர், ஊத்தங்கரை பேரூராட்சி கடிதம் ந.க.எண்.682/2021/அ2 நாள் 24.8.2021 மூலம் தமக்கு அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை காந்தி ரோடில் (வார்டு எண்.11) உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடக்கோரி etownpanchayat portal மூலம் 13.9.2021ல் தாம் புகார் அளித்ததாகவும், அப்புகார் மனு மீது ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை தர்மபுரியில் சந்தித்தபோதிலும், தமது புகார் குறித்து சரியான பதில் வழங்கப்படவில்லை

என்றும், தனது புகார் குறித்து உதவி இயக்குநர் அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவிள்ளார். மேலும் தனது சுய லாபத்திற்காக உதவி கோராமல், பொது மக்கள்நலன் கருதி ஆக்கிரமிப்புகளை அகற்றிடக் கோருவதாகவும், எனவே கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட்பட்ட காந்தி சாலையில் (வார்டு எண்.11) உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட விசாரணை மேற்கொண்டு உத்தரவிடுமாறு கோரியுள்ளார். காந்தி ரோடு எப்பொழுதும் பரபரப்பாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் அத்தெருவில் அமைந்துள்ள இந்தியன் வங்கிக்கு வந்து செல்லும் காரணத்தினாலும், அத்தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளால் மக்கள் மிகுந்த இன்னல்களை சந்திக்கின்றனர் என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடத் தவறிய பேரூராட்சிகளின் உதவி இயக்குர் மற்றும் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905 மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.26722/2013ல் 8.10.2014ல் பிறப்பித்த ஆணையின் அடிப்பிடையிலும், அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.540 வருவாய் (LD6(2)) நாள் 04.12.2014ல் ஆக்கிரமிப்புகள் குறித்த காலத்திற்குள் அகற்றப்படவேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளபோதிலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை தமது புகார் தொடர்பாக சந்திப்பதுகூட மிகவும் கடினமாக உள்ளதாகவும் குறிப்பிட்டு, தனது புகார் குறித்து விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

மனுதாரர் தமது புகார் குறித்து 13.09.2021 அன்று E-Town Panchayat மூலமாக அளித்த புகார் மனுவின் நகல், அதன் அடிப்படையில் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலரால் ஊத்தங்கரை வட்டாசியருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் ந.க.எண்.1080/2021/அ1 நாள் 24.1.2022ன் நகல் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் பொது தகவல் அலுவலர்/செயல் அலுவலர், ஊத்தங்கரை பேரூராட்சியால் அளிக்கப்பட்ட பதிலறிக்கை ந.களண்.682/2021/அ2 நாள் 24.8.2021–ன் நகல் ஆகியவற்றை தமது புகாருக்கான ஆதார ஆவணங்களாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய ஆக்கிரமிப்பு என்பதால், மனுதாரது புகார் மனு மீதான நேரடி விசாரணையை 26.4.2022 அன்று எடுத்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் உறுதிசெய்ததன் அடிப்படையில், மனுதாரர் மற்றும் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக 7.4.2022 நாளிட்ட அழைப்பாணைகள் இம்முறைமன்ற நடுவத்தினால் அனுப்பப்பட்டன.

3. இதனிடையே மனுதாரரின் புகார் மனு மீது ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பியுள்ள 18.4.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் மனுதாரர் 27.11.2021 அன்று மின்னஞ்சல் மூலமாக அளித்த புகார் மனுவின் அடிப்படையில், வட்டாட்சியர், ஊத்தங்கரை அவர்களுக்கு காந்தி சாலையில் ஆக்கிரமிப்புகள் இருப்பதாக அளிக்கப்பட்டுள்ள புகாரின் அடிப்படையில், மேற்படி சாலையில் ஆக்கிரமிப்புகள் இருப்பதை அளந்து, அறிக்கை அளிக்குமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டது என்றும், இதனிடையே இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், வருவாய்த்

துறையின் புல வரைபட நகல் மற்றும் 'அ' பதிவேடு பெறப்பட்டதென்றும், அதன்படி காந்தி சாலை

- 10.4 அடி நீளம் வரை 7 அடி அகலம் மட்டுமே (2 மீட்டர் + 10 செ.மீ) பாதையாக உள்ளது
- 22 அடி நீளம் வரை 5 அடி அகலம் மட்டுமே (ஒன்றறை மீட்டர்) பாதையாக உள்ளது
- 23 அடி நீளம் வரை 7 அடி அகலம் மட்டுமே (2 மீ + 10 செ.மீ) பாதையாக உள்ளது
- பின் 8.4 அடிநீளம் வரை 6.6 அடி மட்டுமே (2 மீட்டர்) சாலையாக உள்ளது
- 35.8 அடி நீளம் வரை 8.6 அடி மட்டுமே (2 மீட்டர் + 60 செ.மீ) அகலமாக உள்ளது
- 44.8 அடி நீளம் வரை அகலம் குறைந்துகொண்டே வருகிறது

என்றும், மேற்படி சாலையை ஆய்வு செய்ததில் இடம் "பாதை"–யாக இருந்துள்ளது. காந்தி சாலையில் கட்டடம் கட்டும்போது பொது மக்கள் இரண்டு பக்கங்களிலும் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யாமல் கட்டடம் கட்டியுள்ளனர். FMB Sketchபடி காந்தி சாலையில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை. காந்தி சாலையில் இந்தியன் வங்கிக் கிளை ஒன்று உள்ளதென்றும், வங்கி வளாகத்தில் பைக் மற்றும் கார் நிறுத்திமிடவசதி இல்லாததால், பாதை ஓரத்திலேயே மக்கள் தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு, வங்கி வேலைகளை முடித்துச் செல்கின்றனர் என்றும், வங்கிச் சேவையின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டும், பொதுமக்களின் வசதியை கருத்திற்கொண்டும், 30 ஆண்டுகளாக அவ்விடத்தில் வங்கி இயங்கிவருவதாலும், பொதுமக்கள் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதை யாரும் இதுவரை ஆட்சேபிக்கவில்லை என்றும் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்விடத்திலோ, பாதையிலோ ஆக்கிரமிப்பு உள்ளதாக இதுவரையிலும் புகார் வந்ததே இல்லை என்றும், இப்பாதையில் கனரக வாகனங்கள் ஏதும் செல்வதில்லை எனவும், 'அ' பதிவேட்டினை பார்வையிட்டபோது அது "பாதை" என்று வகைபடுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

4. 26.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் திரு. சேதுபதி துரைசாமி ஆஜராகவில்லை. ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 26.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஊத்தங்கரை பேரூராட்சி காந்தி சாலையில் இந்தியன் வங்கிக் கிளை ஒன்று செயல்பட்டு வருகிறது. அங்குவரும் வங்கி வாடிக்கையாளர்கள் தங்களது இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை வங்கிக்கு வெளியே சாலையோரத்தில் நிறுத்தம் செய்து வருகின்றனர். மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட வங்கிக்கு அருகே எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. மனுதாரர் இம்முறை மன்றத்தில் மனு செய்ததையொட்டி மேற்கண்ட இடத்தை பேரூராட்சியால் அளக்கப்பட்டதிலும், மேற்கண்ட இடத்தில் FMB sketch கொண்டு கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் அளந்து

பார்த்ததில் அங்கு எவ்வித நில ஆக்கிரமிப்பும் இல்லை என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட இடத்தில் உள்ள கட்டடங்களை ஆய்வு செய்ததில், வங்கிக்கு அருகே இரண்டு பக்கமும் கட்டங்கள் கட்டும்போது கட்டட உரிமையாளர்கள் வீட்டிற்கு முன்பு இடம் விட்டு கட்டடம் கட்டியுள்ளனர். அவ்வாறு இடம் விட்டு கட்டப்பட்டுள்ள இடங்களிலும் சாலையோரங்களிலும் வங்கி வாடிக்கையாளர்கள் தங்களது வாகனத்தை நிறுத்துகின்றனர். எனவே, மேற்கண்ட சாலையில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரால் அளிக்கப்பட்டுள்ள 28.03.2022 நாளிட்ட புகார் மனுவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட காந்தி தெருவில் (வார்டு எண்.11) ஆக்கிரமிப்புகள் உள்ளதால் பொதுமக்கள் அச்சாலையைக் கடக்க மிகுந்த சிரமத்திற்குள்ளாவதால், ஆக்கிரமிப்புகளை அகற்றிடக்கோரி ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலருக்கும், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநருக்கும் புகார் மனு அளித்தும், அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், தனது சுய லாபத்திற்காக இப்புகாரினை முன்வைக்கவில்லை என்றும், பொது மக்கள் நலன் கருதியே தான் புகார் அளித்ததாகவும், தனது புகார் மனுமீது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள விசாரணை மேற்கொண்டு உத்தரவிடுமாறு கோரியுள்ளார்.

- மனுதாரர் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், அதனால் மக்கள் காந்தி சாலையை கடக்க மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள 24.8.2021 நாளிட்ட கடிதத்தில், ஆக்கிரமிப்பு தொடர்பான விவரங்கள் பேரூராட்சியில் இல்லை என்றும், இது தொடர்பாக புகார் வரப்பெறின் அதன் அடிப்படையில், வருவாய்த் துறை மூலம் நில அளவை செய்து உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பதில் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் ஆக்கிரமிப்பு புகார்கள் குறித்த பதிவேட்டில் புகார் எண்.8575 குறித்து அந்த பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து அறியவும், பேரூராட்சியின் உள்ள ஆக்கிரமிப்பு குறித்த பதிவேட்டின் நகலினை வழங்கிடக் கோரியதற்கு, மனுதாரர் கோரிய தகவல் பேரூராட்சியில் கிடைக்கப்பெறவில்லை என்பதால், கேள்வி எழவில்லை என்றும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது, மனுதாரரால் பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட மின்னஞ்சல் புகார் மனுவின் அடிப்படையில், ஊத்தங்கரை வட்டாட்சியருக்கு பேரூராட்சியால் அனுப்பப்பட்டுள்ள 24.1.2022 நாளிட்ட கடிதத்தில் காந்தி சாலையில் ஆக்கிரமிப்பு உள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலையில், கிருஷ்ணகிரி மெயின் ரோட்டிலிருந்து காந்தி சாலையை அளந்து அத்து காண்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பேரூராட்சி நிர்வாகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல. மேலும், வருவாய்த் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கடித நகல் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தர்மபுரி மற்றும் குறுவட்ட நில அளவையர், ஊத்தங்கரை ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சம்மந்தப்பட்ட அனைவருக்கும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்பட்டுள்ளது உறுதியாகிறது.

- வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் ஆகுமென்பதால், ஊத்தங்கரை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து ‘அ’ பதிவேட்டின் நகலினை பெற்று, கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் காந்தி சாலையை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்விடம் பாதையாக இருந்துள்ளது கண்டறியப்பட்டதாகவும், கட்டடம் கட்டும்போது கட்டடம் கட்டிய பொதுமக்களும் இரண்டு பக்கங்களிலும் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யாமல் கட்டடம் கட்டியுள்ளார்கள் என்றும், FMB sketchபடி ஆக்கிரமிப்புகள் ஏதும் காந்தி சாலையில் இல்லை என்பதை ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் உறுதி செய்துள்ளார்.

- காந்தி சாலையில் உள்ள இந்தியன் வங்கிக் கிளைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களது இரு/நான்கு சக்கர வாகனங்களை நிறுத்திட பார்கிங் வசதி இல்லாததால், சாலை ஓரத்தில் தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டு, வங்கிப் பணிகளை முடித்துச் செல்கின்றனர் என்றும், இதுவரை மேற்கண்ட சாலையில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாக பேரூராட்சியில் புகார்கள் ஏதும் வந்ததே இல்லை என்றும், இச்சாலையில் கனரக வாகனங்கள் ஏதும் செல்வதில்லை என்றும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.
- மனுதாரர் தனது புகார் மனுவில் தான் தனது சுய லாபத்திற்காக மனு அளிக்கவில்லை என்றும், பொது மக்கள் காந்தி சாலையைக் கடக்க மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்றும் எனவே தமது புகார் குறித்து நடவடிக்கை எடுக்காத பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மண்டல உதவி இயக்குநர், தர்மபுரி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை; அதுகுறித்த விவரங்கள் பேரூராட்சியில் இல்லை என்றும், மனுதாரரது புகாரின் அடிப்படையில் வருவாய்த் துறையினரை அளந்து அத்து காண்பிக்குமாறு கோரி கடிதம் எழுதப்பட்டு, அதன் நகலும் மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் தனது புகார் குறித்து உரிய ஆதார

ஆவணங்களை அளிக்கத் தவறியுள்ளதும், நடைமுறையில் உள்ள மின்னஞ்சல் சேவை மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகியவற்றை பயன்படுத்திவிட்டு, உடனே நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளதும் தெளிவாகிறது.

➢ சாலைஆக்கிரமிப்பு என்றும் பொது நலன் கருதி தம்மால் அளிக்கப்பட்ட புகார் என்பதையும் அவர் எடுத்துரைத்ததன் அடிப்படையில், இம்முறைமன்ற நடுவம் உரிய விசாரணை மேற்கொண்டு தீர்வுகாணலாமென்று முடிவு செய்து விசாரணைக்கான அழைப்பாணை மனுதாரருக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டது. உண்மையாகவே மக்கள் நலன் கருதி மனுதாரர் தனது புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்திருந்தால், 26.4.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது புகார் குறித்த ஆதார ஆவணங்களையும் தன் பக்க வாதங்களையும் முறையாக முன்னிறுத்தியிருக்கவேண்டும். ஆயினும், இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாமல், விசாரணை அன்று அவரது வருகை குறித்து தொலைபேசி வாயிலாக இம்முறைமன்ற நடுவம் கேட்டபோது மட்டும் தம்மால் வரமுடியவில்லை என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் அறிக்கையுடன் அளிக்கப்பட்டுள்ள இதர ஆவணங்களின் அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட்பட்ட காந்தி தெருவில் (வார்டு எண்.11) இட ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லையென்பது தெளிவாக தெரிகிறது. இருப்பினும், பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் காந்தி ரோட்டில் உள்ள இந்தியன் வங்கியில் அதிக வாடிக்கையாளர்கள் உள்ளதால் அவர்களது வாகனங்களை காந்தி ரோட்டின் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்துவதால் இந்தியன் வங்கிக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான பார்க்கிங் வசதியை ஏற்படுத்திக்கொள்ள உரிய அறிவிப்பினை வழங்கிடுமாறும், காந்தி ரோட்டில் உள்ள கடைகளின் விளம்பரப் பலகைகள் போன்ற ஆக்கிரமிப்புகள் இருப்பின் அவற்றினை அகற்றிடுமாறும் ஊத்தங்கரை பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், மேற்கண்ட பணிகளை முழுமையாக கண்காணித்திடுமாறு பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தர்மபுரி மண்டலம் அவர்களையும் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

புகார் மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தினால் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவுறுத்தியும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டும், நேரடி விசாரணைக்கு ஆஜராகாமல் இம்முறைமன்ற நடுவமே மனுதாரரை தொடர்புகொண்டு கேட்டதற்கு பின்னரே தம்மால் வரமுடியவில்லை என்று தகவல் அளித்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. இது போன்று இனிவரும் காலங்களில் நடந்துகொள்ளக் கூடாது என மனுதாரருக்கு எச்சரித்து ஆணையிடப்படுகிறது.

2022ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. சேதுபதி துரைசாமி,
D.HIG 119, Old ASTC Hudco, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்–635109
செயல் அலுவலர்,
ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்–635 207
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தர்மபுரி மண்டலம், தர்மபுரி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக

2022ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. சேதுபதி துரைசாமி,
D.HIG 119, Old ASTC Hudco, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்–635109
செயல் அலுவலர்,
ஊத்தங்கரை தேர்வுநிலை பேரூராட்சி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்–635 207
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தர்மபுரி மண்டலம், தர்மபுரி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக
2.5.2022